RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s516

# அண்ணாவின் திராவிடக் கருத்தியல்கள்

**க. இராக்கு** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Annavin Thiravida karuthiyal

**K. Rakku** [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: rakkucnc@gmail.com

Received: 09-08-2021
Revised: 20-04-2022
Accepted: 27-04-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

If Periyar is the root father of Dravidian thought, then its hero can be the scholar Anna. The great man who fought for the individual ideals of self-respect, femininity, equality, rationality, fraternity, caste discrimination and non-discriminatory society through Dravidian policy was an individual who followed them and uttered Dravidian ideologies on the stage in his own erudition. Scholar Anna, who is a versatile personality in writing, speaking, acting and acting, has been a star of hope in the Tamil community. Anna's insider "Grandfather Anna is an intellectual genius, a political dawn, a rationalist, Father Periyar's personal commander, an artistic guard, a turning point in the screen, an Ingersoll in casting caste, religion, sectarian music, a master of music in the preservation of the mother tongue. Wake up, the conversation is a famous beacon there, and Grandfather Anna is hailed as a good university," S. Maruthavanan identifies. Scholar Anna Dravid was the one who transformed the movement into a popular ideology. Father Periyar set up his campaign very simply to attract the uneducated. Anna was the one who targeted the literate middle-class people created by the shoe impact.The familiarity and reading habits of Tamil literature that developed during and after the liberation of the country created a kind of awareness among the people through drama, film, stage, visual, question and media influences. This was exactly what Anna and his Dravidian movement used. The study summarizes how Anna, through Anna's works and speeches, sowed the seeds of Dravidian ideology in our society for change.

**Keywords:** Dravidian Ideology, Dravidian Crop, Dravidian Dawn, Rise to the Literary, Political Dawn, Art Guardian

## முன்னுரை

அறிஞர் அண்ணா எழுத்தின் அனைத்து வகைமைகளையும் கையாண்டவராகத் திகழ்ந்தவர். பத்திரிகைகளுக்கு தலையங்கம், கட்டுரை, சிறுகதை, நெடுங்கதை, கடிதங்கள், உரையாடல், நாடகம், திரைப்படம், திறனாய்வு, கவிதை, மேடைப்பேச்சு, கேழிச்சித்திரங்கள், மொழிபெயர்ப்பு முதலிய அனைத்திலும் தடம் பதித்தவர்.

அண்ணா முழுநேர எழுத்தாளர் அல்லர்; களப்பணியாளராகவே இருந்தவர். தேவை கருதி எழுத்தைப் பயன்படுத்தியவர்." கடுமையாகப் பணியாற்றுவதற்கு இடையிலேயும் உனக்கு மடல் எழுதவும் கதை, கட்டுரை, உரையாடல் போன்ற வடிவங்களில் என் எண்ணங்களை வெளியிடவும் நான் தயங்கினதும் இல்லை, அது எனக்கு பளுவான வேலையாகவும் தோன்றியது இல்லை.

சொல்லப்போனால் மனத்திலே ஏற்பட்டுவிடும் சுமையும் அதனால் ஏற்படும் சோர்வும் உனக்காக எழுதும் போது பெருமளவு குறைந்து போவதுடன் புதிய தெம்பும் பிறந்திடுகிறது" என தான் எழுதும் சூழலையும், அதனால் தான் அடையும் மன நிறைவையும் அண்ணா பதிவு செய்வார். அண்ணா எழுத்துகளிலும் பேச்சுகளிலும் முற்போக்கு சிந்தையை விதைத்து திராவிடப் பயிரை வேரூன்றச் செய்த பெருமைக்குரியவராய் திகழ்ந்தவர் (Muthaiya, 2005).

## பெரியாரும் அண்ணாவும்

தமிழக மக்களின் வாழ்வியலைச் சீராக்கவும், தமிழக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தவும் தலைப்பட்ட தலைமகன்கள் பெரியாரும் அண்ணாவும். பெரியாரின் தீவிர பற்றாளராக இருந்து வந்த அண்ணா கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார்.

இந்தியா குடியரசானப் பிறகு தமிழகத்தில் ஆட்சியமைத்த முதல் திராவிடத் தலைவர் அண்ணா. திராவிடக் கழகத்தை அண்ணா ஆரம்பிக்க மூலமாக இருந்தது பெரியாரின் திராவிடக் கொள்கைகளே.

## அண்ணாவின் தி.மு.க.

தி.மு. க பங்கெடுத்த முதல் சட்டமன்ற தேர்தலிலேயே 13 இடங்களைக் கைப்பற்றித் தனது கனல்தெறிக்கும் பேச்சால் இளைஞர் கூட்டத்தை தி.மு. க வின் பக்கம் திரும்பச் செய்தவர் அண்ணா. அதன்பிறகு தி. மு. க விலிருந்து பிரிந்து 1972-ல் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் உருவானது.

## அண்ணாவின் திராவிடக் கருத்தியல்கள்

திராவிடக் கருத்தியலின் தொண்டராகத் தொடங்கி, பிறரது பேச்சினைத்தமிழில் மொழிபெயர்த்து, பின்பு பேச்சாளராக, சிறந்த சிந்தனையாளராக, சிறந்த தலைவராக, சிறுகதை எழுத்தாளராகக், கட்டுரை, இதழ், திரைக்கதை, நாடகத்தின் ஆசிரியராக குணச்சித்திர நடிகராக, சட்டமன்ற உறுப்பினராக, மேதகு முதல்வராகப் பல்வேறு துறைகளில் தமது பங்களிப்பைச் செய்து தமிழ்நாடு கண்ட தங்க மகனாய்த் திகழ்ந்தவர் அண்ணா.

## அண்ணாவைப் பற்றி பெரியார்

அண்ணாவின் மறைவுக்குப்பின் சென்னைக் கடற்கரையில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில், "அண்ணா அவர்கள் யார் அவர் என்னுடைய தலைமகன்! அவர் இளைஞராக இருந்த பொழுது என்னுடைய கொள்கையை ஏற்றுக்கொண்டு பிறகு மாற்றிக்கொண்டவர் அல்ல; அவர் ஆட்சிக்கு வந்த பொழுது இந்த அமைச்சரவையே எனக்குக் காணிக்கை என்று சொன்னார். இது ஏதோ தனிப்பட்ட ஈ.வே. ராமசாமிக்காக அல்ல என்னுடைய கொள்கையை ஏற்றுக் கொண்டு செய்வதற்குத்தான் இந்த ஆட்சி என்று சொன்னார்" (Muthaiya, 2005). எனப் பெரியார் நெகிழ்ச்சியாகக் குறிப்பில் பேசியது பெரியாரியக் கொள்கை தான் அண்ணாவின் கொள்கைகளாக இருந்தது புலப்படுகிறது.

நம் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்ட மடமையை எதிர்த்த பெரியார், இலக்கியங்களை வெறும் குப்பை என்பார். அதைப்போல அண்ணாவும்

"அறிவுக்குப் பொருந்தாதவையும் ஆராய்ச்சிக்கு ஏற்காதவையும், அறியாமையை அகற்றி மடமையை மக்கள் மனதில் புகுத்தும் போலிகளாகவே நமக்கிருக்கும் இலக்கியங்கள் உள்ளன" எனத் தெரிவிக்கிறார் (Marudhavanan, 2008).

## அண்ணாவின் ஆரிய எதிர்ப்பு

தமிழகத்தில் ஆரியம் நுழைந்ததால் திராவிடம் தேய்ந்தது எனத் திராவிட சிந்தையினர் திராவிடம் காக்கத் தலைப்பட்டனர். மது உண்ட மயக்கத்தால் கீழே சாய்ந்தவன் கதிதான் திராவிட

நாட்டின் கதி. தீயோர் கூட்டுறவால் திராவிடம் தேய்ந்தது. ஆரியனின் அரியணை ஆட்சியில் உள்ளம் உருக்குலைந்து விட்டது.

"ஆரியம் தமிழரிலே தன்னுணர்வு அறிவு நுணுக்கம் கற்றவர்களைப் பலி கொண்டது" என வருத்தம் கொள்கிறார் அண்ணா" (Muthaiya, 2005).

இசைத்துறையில் ஆரியம் புகுந்து இழுக்கச் செய்வதைத்தடுக்க தமிழ்நாடு தமிழ்ப்பால் கேட்பதைத் தர கொடை வள்ளல் ராஜாசர் அவர்கள் செய்த இந்தப் பேருதவிக்குப் பார்ப்பனர்கள் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். தமிழரின் எண்ணம் ஈடேறச் செய்வது கண்டு சீறுகின்றனர். தெலுங்குக் கீர்த்தனங்களுக்கும், இந்துஸ்தானி துக்கடாக்களுக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு வாதிடுகின்றனர். தமிழர் மறுமலர்ச்சி கண்டு ஆத்திரமடைந்து ஆர்ப்பரிக்கின்றனர். ஆரியத்தால் தமிழினம் நசுக்கப்படுவதையும் தமிழிசை ஒழிக்கப்படுவதையும் எதிர்க்கத் துணிந்தவர் அண்ணா.

அண்ணாவின் தாகம் தமிழையும் தமிழ் மண்ணையும் காக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் பகுத்தறிவு சிந்தனையே மனிதனை மனிதனாகக் காட்டுவது என்பதில் முனைப்போடு இருந்திருக்கிறது.

"வீராவேசம் கொண்ட வேங்கையானாலும் சதுப்பு நிலத்திலே படுகுழியிலே வீழ்ந்து விட்டால் சாகத்தானே வேண்டும். நீள்வையம் எதிர்த்தாலும் எமக்கு நிகர் இல்லை என்று கூறிப் போரிடும் மறத் தமிழரும், ஆரிய மதக் குழியிலே வீழ்ந்தால் அறிவு, ஆற்றல், ஆண்மை, மானம் என்னும் பண்புகளை இழக்க நேரிட்டது அன்றும் இன்றும்!". எனக் கூறுவதில் ஆரிய அருள் வேண்டாம் திராவிட மானமே போதும் என்கிறார் (Muthaiya, 2005).

## திராவிடம் கண்ட திருமகன் அண்ணா

திராவிடக் கருத்து நிலைகளான உண்மை, அறிவு, ஆராய்ச்சி போன்றவற்றை மக்களுக்கு விதைத்ததிலே பெரியாரின் பங்கு அளவிடற்கரியது அதுபோல் அண்ணாவின் பங்கும் சிறப்பிற்குரியதாகிறது.

"நாமிருக்கும் திராவிடம் நமது என்பதறிந்தோம். இது நமக்கே உரிமை என்பதும் அறிந்தோம். இதனை இந்தியாவுடன் இணைத்திடும் சூதினை வெறுத்தோம். திராவிடம் அரியணையைப் பெற உயிரையும் தருவோம்" என மொழிந்தவர் அண்ணா ஆரியர்களின் பிடியில் சிக்கியுள்ள திராவிடத்தின் விடுதலைக்காகப் போரிடுவதே நம் கடமை' என்று விழித்தெழச் செய்கிறார் (Muthaiya, 2005).

தேசியம் என்று ஒருசாரர் சொல்கிறார்கள் திராவிட தேசியம் என்கிறோம் நாம். இல்லை இல்லை தமிழ்த்தேசியம் தான் இருக்கிறது என்கிறார்கள் ஒரு சாரார். இன்றும் திராவிடத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாதோர் நிலையும் அதுவாகத்தான் இருக்கிறது. திராவிடக் கருத்தியலில் பகுத்தறிவு என்பது மேலோங்கிய சிந்தனையாகவே கொள்ளப்படுகிறது. மானமுடைய ஒவ்வொருவருக்கும் பகுத்தறிவு பண்பாடு என்பது தான் திராவிடம். அவ்வகையில் அண்ணா "மானத்தோடு வாழ ஒருவனை ஒருவன் தாழ்த்தாமல், வாழ்வதற்குரிய ஏடுகள் தேவை" என்கிறார்.

விதி விதி என்று பேசி மக்களின் மதியை மாய்க்கும் ஏடுகளல்ல நமக்குத் தேவை தமிழ்ப் பேசும் சமூகத்தைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை. மதியைப் பெருக்கி விதியை தொலைக்கும் ஏடுகள் தேவை என உரைத்தவர் என்பதோடு மட்டுமல்லாமல் புதிய கருத்துகள் பல தோன்ற வேண்டிய நேரம் எனப் பகுத்தறிவைப் புகட்டி புராண இலக்கியம், பொழுதுபோக்கு இலக்கியம், கற்பனை இலக்கியம், சிந்தனை, சீர்திருத்தம், முற்போக்கு, மறுமலர்ச்சி இவற்றை மலுங்கடிக்கும் இலக்கியம் எனச்சாடி புதுமை தேடப் புறப்படும் இளைஞனை வரவேற்று வாழ்த்துகிறார் (Thoguppu Kulu, 2008).

கற்பனைக் கருத்தோட்டமான இராமாயணம் திராவிடரை இழிவுபடுத்தி எழுதப்பட்டது என்ற பெரியாரின் சிந்தையை வழிமொழிந்து படிப்போருக்குப் பகுத்தறிவு தேவை எனப் பரப்பியவர் அண்ணா.

## அண்ணாவின் கடவுள் மறுப்புக் கொள்கை

திராவிடக் கருத்தியலில் கடவுள் மறுப்பு என்பது காரணம் கருதியது. திராவிடக் கொள்கைகள் அனைத்தும் வரவேற்கக் கூடியது என்றாலும் கடவுள் மறுப்புக் கொள்கை மாயைக் குட்பட்ட மனிதர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கிறது.

"கடவுளின் பெயரால் அற்புதங்களைச் செய்துகாட்டி, மதத்திற்குத் திருப்பும் வைதிகர்களிடம் இதை கேளுங்கள் பிழைப்புக்காக மாயாஜாலம் செய்யும் வித்தைகாரனின் 'பிழைப்பு' என்னும் கடவுள் நாகரிகமானவர்" என்பதில் அவரவர் உழைப்பும் பிழைப்புமே கடவுள் என்று கருதப்பட வேண்டியதாக இருக்கிறது (Muthaiya, 2005).

மேலும், கடவுளின் பெயரால் நடத்தப்படும் வன்முறைகள்தான் நாட்டில் பெருக்கம். கடவுளே கொடுமைகளின் ஒருமைப் பாட்டுக்கு உடந்தையாக இருந்தால், உலக ஒருமைப்பாடும் மக்களின் ஒருமைப்பாடும் எப்படிச் சாத்தியம் என்கிறார்.

"ஒரு மனிதன் எந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், கோயிலுக்குள் வரக்கூடாது எனத் தடுக்கப்படும் வரை, அந்தக் கோயிலுக்குள் இருக்கும் கடவுள் சிலையும் சக்தியற்றது தான்". எனக் கடவுள் மறுப்போடு சாதியத்தையும் சாடியிருக்கிறார் (Marudhavanan, 2008). "கடவுள் மனிதனின் சிருஷ்டி! மதம் மனிதனிடம் ஏற்படுத்தப்பட்ட மன மயக்கம்!". என்பதோடு "வேதாந்த விசாரத்தில் மூழ்குகிறோமே தவிர வேதாந்த விசாரத்தைத் தொட்டுத் தழுவும் மூளையின் பலத்தையும் பலவீனத்தையும் இறைமைப்படுத்திப் பார்க்கும் மனிதனே மனிதன்" என்கிறார் (Muthaiya, 2008). அறிவு சிந்தனை எங்கிருந்தும் பிறக்கலாம். சிந்தனையில் உருவாகும் தெளிவில்தான் ஏக்கம் நிறையா இன்ப வாழ்வு என்பது நிலைத்திருக்கும் என அறிவுறுத்தியவர் அண்ணா.

பகுத்தறிவே பண்புடையோரை நிலைநிறுத்துவது என்றும் இளைய தலைமுறையினருக்கும் பகுத்தறிவு இன்றெனில் இருண்டு கிடக்கும் சமுதாயத்தை ஒளி பெறச் செய்வது எவ்வாறு என்பதில் முனைப்போடு இருந்தவர்கள்தான் அண்ணாவும் பெரியாரும்.

காவி உடையைக் கண்டு மயங்காதீர்கள். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவியணிந்து சமுதாயத்தை வஞ்சிக்கிறான். சீலராக இருக்கின்றனரா? எனக் கண்டறியச் செயலைக் கவனியுங்கள் எனக் காவி உடையில் புனிதர்கள் எனக் காட்டிக் கொள்ளும் மாக்களை அடையாளம் கண்டு வாழ வேண்டும் என்னும் பகுத்தறிவைப் பக்குவமாய்ப் புகுத்தியிருக்கிறார்.

பசி, பட்டினி, வறுமை, இழிவு மொழிகள், ஏளனம், பழிச்சொல், புறக்கணிப்பு போன்ற நாசக்காரர்களின் நயவஞ்சகச் செயல்கள் அத்தனையும் திராவிடர்களை ஒன்றும் செய்து விடாது என்பதோடு பகுத்தறிவு பல பேசிய பண்பாளராய் இலங்குகிறார்.

மக்களிடையே மத மூட நம்பிக்கைகளைப் போக்கி சாதி சமய பேதங்களை அகற்றிச் சமத்துவத்தையும், சன்மார்க்கத்தையும் ஏற்படுத்தி அஞ்ஞானத்தை நீக்கி விஞ்ஞான உணர்வை ஊட்டி, தன்னம்பிக்கையையும், தளராத உழைப்பையும், ஊக்கத்தையும் உண்டாக்கித் தீரவேண்டும். மாணவர்களுக்குப் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை ஆசிரியர்கள் பரப்பித்தான் ஆக வேண்டும். அதுவே அவர்களின் மனப்பண்பை விரிவாக்கும். அவர்களை நற்கருத்துடையவர்களாக்கும்.

மாணவர்கள் கெட்டு விடுவார்கள் என்று கூறுவார்கள் எவரும் முற்றும் உணர்ந்தவர்கள் இல்லை ஆசிரியர்களே பகுத்தறிவு கொண்டு பல விஷயங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்தான் இருக்கிறார்கள் என அண்ணா கூறுவதில் ஆசிரியரும் மாணவரும் பகுத்தறிவு பெறுவார்களெனில் வருங்கால சமுதாயம் அறிவுடையதாகும் என்பது தெளிவு என்கிறார் அண்ணா.

## முடிவுரை

திராவிடக் கருத்தியலில் பெரியாரே அண்ணாவின் வழிகாட்டியாய் இருந்தார். தமிழக மக்களின்

வாழ்வியலைச் சீராக்க வந்த தலைமகன் அண்ணா. பல்வேறு துறைகளில் தமது பங்களிப்பைச் செய்து தமிழ்நாடு கண்ட தங்க மகனாய்த் திகழ்ந்தவர் அண்ணா. பகுத்தறிவு சிந்தனையே மனிதனை மனிதாகக் காட்டுவது என்ற குறிக்கோளைக் கொள்கையாகக் கொண்டவர். திராவிடரின் மானமே பெரிதெனப் போற்றியவர் அண்ணா. திராவிடத்தின் விடுதலைக்காகப் போரிடுவதே நம் கடமை என்றவர். திராவிடம் அரியணைப் பெற உயிரையும் தருவோம் என முழங்கியவர். ஏற்றத்தாழ்வு இல்லாத வாழ்வே மானமுடைய வாழ்வு எனக் கூறியவர். முற்போக்கும் மறுமலர்ச்சியுமே நாட்டின் அவசியம் என மொழிந்தவர். திராவிடக் கொள்கையாம் கடவுள் மறுப்பை காரணத்தோடு எடுத்துரைத்தவர் அண்ணா.

## References

Marudhavanan, S., (2008) Annavin Katturaigal, Poompuhar Pathippagam, Tiruchirappalli, India.

Muthaiya, B.L., (2005) Annavin Arivu Kanigal, Mulai Pathippagam, Chennai, India.

Muthaiya, B.L., (2008) Periyar uthirtha muthukkal, Mulai Pathippagam, Chennai, India.

Thoguppu Kulu, (2008) Annavin Kavidhaikal, Periyar Sinthanai uyaraaivu Mayyam, Tiruchirappalli, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License